மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

" தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1979) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, திருத்தப் பெற்றபடி சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-26 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

152. திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டையிலுள்ள கேரள அரசின் மர விற்பனை நிலையம் தனது மர விற்பனை மீது வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கும் பொருட்டு வணிக வரிகள்—அறக்கட்டளைகள் துறையின் 5—3—1979 ஆம் தேதியிடப்பெற்ற அரசாணை எண். 243-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் I/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பட்டது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

* 193. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1977-78 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின்போது சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கிய கருத்துரைகளும் அக்கருத்துரைகள் மீதான குறிப்புரைகளும் அடங்கிய விவர அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

* 194. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 25/1979).

---

* 23-4-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

1979 ஏப்ரல் 25]

** 195, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண், 30/1979).

** 196. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.5.) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 31/1979).

இணைப்பு I.

[343-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 815-க்கான விடையைக் காண்க.]

திருச்சிராப்பள்ளியில் 25—4—1978 அன்று நடந்த மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக் குழுக் கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்பு,

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள அவைக் கூட்டத்தில் 25—4—1978 அன்று காலை 10 மணிக்கு மாநில தொழிலாளர் ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெற்றது. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரும். அக்குழுவின் தலைவருமான திரு. எஸ். இராகவானந்தம் அக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். கீழ்க்காணும் உறுப்பினர்கள் கூட்டத்திற்கு வந்தனர்,

1, திரு. ச. ராமச்சந்திரன்,
அரசுச் செயலாளர்,
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை,
சென்னை-9.

2, திரு. எஸ். நரசிம்மன்,
தொழிலாளர் நலத்துறை ஆணையாளர், செயலாளர்,
சென்னை-5.

3, திரு. ஹரி ஈஸ்வரன்.
தலைவர்,
தென்னிந்திய தொழிலதிபர்கள் கூட்டமைப்பு.
சென்னை-1.

** 24-4-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.